| | |
|---|---|
| நோயாளியின் பெயர் | |
| வயது | |
| ஒரு மணிநேரத்தில் உள்ளெடுக்க வேண்டிய நீராகாரத்தின் அளவு | |
| அடுத்த முழு குருதி எண்ணிக்கைப் பரிசோதனை (FBC) செய்ய வேண்டிய நாள் மற்றும் நேரம் | |

## டெங்கு நோயாளியை வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்கான அறிவுரைகள்

- டெங்கு NS1 பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்ட எல்லா நோயாளிகளையும் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.
- ஒரு எதிர்மறை NS1 பரிசோதனை முடிவானது டெங்கு நோய் இல்லை என்பதை உறுதிப்படுத்தாது.
- தகுதி வாய்ந்த ஒரு மருத்துவரின் ஆலோசனையின் படியே டெங்கு நோயாளியின் வீட்டு பராமரிப்பானது முன்னெடுக்கப்பட வேண்டும்.
- நாளாந்த முழு குருதி எண்ணிக்கைப் பரிசோதனையின் (FBC) குருதிச்சிறுத்தட்டு (பிளேட்லெட் – Platelet) எண்ணிக்கைக்கு ஏற்பவே வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான முடிவானது எடுக்கப்படும்.

### இலகுவான வீட்டு பராமரிப்பிற்காக நோயின் ஆரம்ப நிலையின் போது பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள்

**1. <u>ஓய்வு</u>**

உடல் ஓய்வானது அதிகமாக பரிந்துரைக்கப்படுகிறது. நீங்கள் வீட்டில் தங்கி ஓய்வெடுத்தல் அவசியம்.



**2. <u>காய்ச்சலைக் கட்டுப்படுத்தல்</u>**

- பரசிட்டமோலை மாத்திரம் பயன்படுத்தவும்.
- காய்ச்சலைக் குறைக்க ஒருபோதும் **இபுபுருபன், டைக்லோபினாக், மேபனமிக் அசிட் மற்றும் செலெகோக்சிப்** போன்ற **NSAIDS** மருந்துகளைப் பாவிக்க வேண்டாம்.
- காய்ச்சலைக் கட்டுப்படுத்த ஒருபோதும் **ப்ரட்னிசொலோன்** , **டெக்சாமேதசோன்** போன்ற **ஸ்ரோயிட்** மருந்துகளைப் பாவிக்க வேண்டாம்.
- பரசிட்டமோல் அளவு மற்றும் காய்ச்சலைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் உங்களது வைத்தியரின் அறிவுரைகளைப் பின்பற்றவும்.
- ஒத்தடம் பிடித்தல் – உடலில் உஷ்ணம் இருக்கும் போது, தூய்மையான துவாயை மிதமான சூடுள்ள நீரில் தோய்த்து, மேலதிக நீரை பிழிந்து அகற்றிய பின் அதைக்கொண்டு நோயாளியின் உடலை துடைக்கவும். இது காய்ச்சலை விரைவாக குறைக்க உதவும்.



## 3. எப்போது அல்லது எவ்வளவு காலத்துக்கு ஒரு தடவை முழு குருதி எண்ணிக்கைப் பரிசோதனை (FBC )செய்யப்பட வேண்டும்?

- உங்களது வைத்தியரது பரிந்துரைக்கு ஏற்ப முழு குருதி எண்ணிக்கைப் பரிசோதனையை 8 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை அல்லது 12 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை செய்யவும்
- இயலுமானவரை விரைவாக( குறைந்தளவு 2 மணித்தியாலங்களுக்குள் ) உங்களது பரிசோதனை அறிக்கையை வைத்தியரிடம் காண்பித்து தேவையான மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும்.
- குறுதிச் சிறுத்தட்டு எண்ணிக்கை 130000 இற்கு குறைந்திருப்பின் உடனடியாக வைத்தியரை அணுகவும்.
- வைத்தியரைக் காண வரும் போது உங்களது பரிசோதனை அறிக்கைகள் அனைத்தையும் கொண்டுவரவும்.

## 4. உணவு

- பசி இருக்குமிடத்து எளிமையான உணவுகளை உட்கொள்ளவும்.
- சிவப்பு அல்லது மண்நிற உணவு மற்றும் நீராகாரங்கள் மலம் அல்லது வாந்தியுடன் குருதி வெளிவருகிறதா என அவதானிப்பதில் குழப்பங்களை விளைவிக்கும். எனவே இவற்றைத் தவிர்க்கவும்



## 5. நீராகாரங்கள்

- வெறும் நீரை மட்டும் உள்ளெடுக்காது, கனியுப்புக்களைக் கொண்ட பழச்சாறு, வெள்ளை அரிசிக் கஞ்சி, ஜீவனி, இளநீர் போன்ற நீராகாரங்களை அதிகளவு எடுக்கவும்.
- சாதாரணமாக கழிக்கும் சிறுநீரின் அளவை பேணும் வகையில் போதுமானளவு நீராகாரங்களைக் குடிக்கவும்.
- உங்களது உடல் நிறையை கிலோகிராமில் நிறுக்கவும். நிறை 30kg இற்கும் 50 kg இற்கும் இடையில் இருப்பின் ஒரு மணித்தியாலத்துக்கு உங்கள் நிறையின் இரு மடங்கு ml நீராகாரத்தை உள்ளெடுக்கவும்
- உங்கள் உடல் நிறை 30 kg ஐ விட குறைவாக இருப்பின் தேவையான நீராகாரத்தின் அளவு மாறுபடும். உடல் நிறை 50 kg ஐ விட அதிகம் எனின் ஒரு மணித்தியாலத்துக்கு 100ml திரவ ஆகாரத்தை உள்ளெடுக்கவும்.

| உடல் நிறை | ஒரு மணி நேரத்தில் உள்ளெடுக்கவேண்டிய நீராகாரத்தின் அளவு |
|---|---|
| 5kg | 20ml |
| 10 kg | 40 ml |
| 20 kg | 60 ml |
| 30 kg | 70 ml |
| 40 kg | 80 ml |
| 50 kg | 100 ml |
| 50 kg ஐ விட கூடிய நிறை | 100 ml |



- உங்களது நிறைக்கு ஏற்ற, ஒரு மணி நேரத்தில் உள்ளெடுக்க வேண்டிய திரவ ஆகாரத்தின் சரியான அளவை வைத்தியரிடம் கேட்டு அறிந்து கொள்க
- உள்ளெடுக்கும் நீராகாரத்தை அளவிட நியமமான அளவிடை கொண்ட கோப்பையைப் பாவிக்கவும்.


அளவு முகவை


கோப்பை (200ml)


கண்ணாடி குவளை (300 ml)

## 6. வெளியேறும் சிறுநீரின் அளவு

- நீங்கள் ஒரு மணிநேரத்தில் உங்கள் நிறைக்கு(kg இல் ) சமமான அளவு ml சிறுநீரை வெளியேற்றும் வகையில் போதுமானளவு நீராகாரத்தை உள்ளெடுக்க வேண்டும். இது உடல் நீர்இழப்பு நிலைக்கு உள்ளாவதைத் தடுக்கும்.
- நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை சிறுநீர் கழிப்பதுடன், வெளியேறும் அளவையும் அளவிட வேண்டும்.

| உடல் நிறை (kg இல் ) | ஒரு மணித்தியாலத்தில் கழிக்கப்பட வேண்டிய சிறுநீரின் அளவு. | நான்கு மணித்தியாலங்களில் கழிக்கப்பட வேண்டிய சிறுநீரின் அளவு. |
|---|---|---|
| 20 kg | 20ml | 80 ml |
| 40 kg | 40 ml | 160 ml |
| 60 kg | 60 ml | 240 ml |

- எதிர்பார்க்கப்பட்ட அளவை விட சிறிதளவு அதிகமான சிறுநீர் வெளியேற்றப்படின் எது வித பிரச்சனையும் இல்லை.
- கழிக்கும் சிறுநீரின் அளவு எதிர்பார்க்கப்பட்ட அளவை விட குறைவாக இருப்பின் சிறுநீரின் அளவை சரியான முறையில் பேணும் பொருட்டு மேலதிக திரவ ஆகாரத்தை உள்ளெடுக்க வேண்டியது அவசியம்.
- நோயாளிக்கு தாகம் எடுத்தால், தாகம் குறையும் வரை நாளொன்றுக்கு 3-4 தடவைகள் வரை மேலதிக திரவ ஆகாரங்களை எடுக்கலாம்.
- நோயாளிக்கு தாகம் தொடர்ந்து இருப்பின் இயலுமானவரை விரைவாக வைத்தியரை அணுகவும்.

உள்ளெடுக்கப்பட்ட நீராகாரத்தின் அளவு, வெளியேறிய சிறுநீர் அளவு என்பவற்றை நேரத்துடன் குறித்து வைத்தல் அவசியம். வைத்தியரிடம் செல்லும் போது அதனை எடுத்துச் செல்லவும்.
அதற்காக கீழுள்ளது போன்ற அட்டவணையைப் பாவிக்கலாம்.

| திகதி மற்றும் நேரம் | உள்ளெடுக்கப்பட்ட நீராகாரத்தின் அளவு (ml) | திகதி மற்றும் நேரம் | வெளியேறிய சிறுநீர் அளவு (ml) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**பின்வரும் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாடவும்.**

1. தொடர்ச்சியான வயிற்றோட்டம் அல்லது வாந்தி
   (இது உடலின் நீர்ச் சத்து இழப்பை ஏற்படுத்துவதால்)
2. தீவிர உடல் இளைப்பு அல்லது சோம்பல்தன்மை
3. இரத்தப்போக்கு ( உடலின் எந்த பகுதியில் இருந்தும்)
4. கடுமையான தலைவலி
5. கடுமையான வயிற்று வலி

**இது தவிர வேறு ஏதாவது உடல் உபாதைகள் இருப்பினும் எது வித தாமதமும் இன்றி வைத்தியசாலையை நாடவும்.**

**வேறு நோய்கள் போல் இன்றி டெங்கு நோயின் போது காய்ச்சல் குறைவது நோய் குணமடைவதைக் குறிக்காது. ஏனெனில் காய்ச்சல் குறையும் போதே டெங்கு நோயின் சிக்கல்கள் ஆரம்பிக்கும்.**


Epidemiology Unit
Ministry of Health

தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு

சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு